பஸ்கொட பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்கொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பஸ்கொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும்

வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான புதல்நாகம சனசமூக நிலையத்தின் பெறுமதி ரூபா 1.1 மில்லியன் தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு மூலம் மூலதனப்படுத்தி சரி செய்யப்படும் என.	சனசமூக நிலையத்தில் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த மலை நாட்டு பத்தாண்டு இணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய ரூபா 0.55 மில்லியனிற்கான நிருவாகச் செலவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்படும் என.	சரியான பெறுமதிக்கு செலவுகளை அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	கடையறை வாடகைக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 6.56 மில்லியனிற்கான ஒரே தடவையில் கிடைக்கும் பணம் வைப்புத்	இணங்குகின்றேன்.	ஒரே தடவையில் பெறும் பண வைப்புத் தொகையொன்று (பிற்போடப்பட்ட

	தொகையொன்றென கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.		வருமானம்) என கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த கடையறையொன்றிற்குரிய ரூபா 0.83 மில்லியனிற்கான ஒரே தடவையில் பெறும் பணம் பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால், பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணக் கணக்கு அந்த எண்ணிக்கையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் கணக்குகளின் மூலம் சரி செய்யப்பட வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 40,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	பதிவேடுகள் நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.3 கணகக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலையான சொத்துக்கள் பதிவேடு, நாளதுவரை ஆக்கப்பட்ட நிலுவை வருமான பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29.12 மில்லியன இற்கான 04 கணக்கு விடயங்களின் மீதிகள் கணக்காய்வில் திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.	பதிவேடுகள் சரி செய்யப்பட்டு வருகின்றது என.	கணக்கு மீதிகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 25.70 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 12.72 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரி மற்றும் வரி	2,387,030	2,399,352	2,450,486	211,472	2,956,600	2,282,625	2,532,302	262,606
(ii)	வாடகை	10,485,680	9,995,002	9,697,533	756,044	9,846,960	9,712,368	9,929,263	458,575
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணம்	951,100	1,163,711	1,289,711	8,000	751,200	1,104,040	1,165,478	134,000
(iv)	ஏனைய வருமானங்கள்	7,575,080	9,055,042	8,780,385	1,063,168	7,445,650	11,037,144	10,991,448	788,511
		21,398,890	22,613,107	22,218,115	2,038,684	21,000,410	24,136,177	24,618,491	1,643,692

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்கண்டு வெளியிடப்பட்டு 2½ வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் வேண்டியிருந்த தகவல்கள் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது என.	விரைவாக ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) மீளாய்வாண்டின் போது ஏக்கர் வரியை அறவீடு செய்யும் முன்னேற்றம் 20 சதவீதம் போன்ற குறைந்த பெறுமதியை கொண்டிருந்ததுடன், வருட ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 97,206 தொகைக்கான நிலுவை ஏக்கர் வரி மீதி வருட இறுதியளவில் ரூபா 99,672 தொகை வரை அதிகரித்திருந்தது.	அறவிட முடியாத மீதிகளை பதிவழிப்பதற்கு ஆளுனருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை ஏக்கர் வரியை அறவீடு செய்வதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.
(iii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற 41 வியாபார நிலையங்கள் மீளாய்வாண்டிற்காக ரூபா 0.06 மில்லியன் தொகைக்கான வியாபார வரி செலுத்தியிருக்காத போதிலும், இது தொடர்பாக பிரதேச சபைச் சட்டத்தின் 150(4) பிரிவின் பிரகாரம் வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	நிலுவை வருமானம் குறிப்பிட்ட காலத்தினுள் அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். வேண்டும்.

(ஆ) வாடகை

சபைக்குச் சொந்தமான 07 வர்த்தக தொடர் கட்டிடங்களில் 47 கடைகளில் இருந்து ரூபா 821,672 தொகை நிலுவை கடை வாடகை (தண்டப் பணம் உட்பட) வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 5,000 தொகையை விட மிகையான மீதிகளின் பெறுமதி ரூபா 799,076 தொகையாக காணப்பட்டது.	பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்காக வாடகைக்கு எடுத்தவர்கள் இணங்காமையால் மூன்று கடையறைகள் நீண்ட காலம் முதல் கொடுப்பனவை புறக்கணித்திருந்தது.	நிலுவை வருமானத்தை குறிப்பிட்ட காலப் பகுதியினுள் அறவிடப்பட வேண்டியதுடன், வாடகை செலுத்தாத கடை உரிமையாளர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 0.15 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12.06 மில்லியன் தொகை பெற வேண்டிக் காணப்பட்டது.	அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126(viii)(உ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக அனுமதிப்பத்தரங்கள் வழங்கி கட்டணங்கள் அறவீடு செய்தல் தொடர்பாக ஏற்பாடுகள் அடங்கிய துணை விதிகள் விதிப்பதற்கு மீளாய்வாண்:டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வரைபு, உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என.	துணை விதிகள் விரைவாக விதிக்கப்பட்டு சபைக்கு வருமானம் உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பை முகாமைத்துவத்திற்கான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், சேகரமாகும் உக்காத குப்பைகளை பொரலம்பொத திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ வளவில் குவிக்கப்பட்டு சுமார் ஒரு மாதத்திற்கு ஒருமுறை மண்ணினால் மூடப்படல் மேற்கொள்ளப்படுகின்றது. அந்தக் காணியை அண்டி துர்நாற்றம் பரவுதல், நீர் மூலவளங்கள் அசுத்தமடைதல் மற்றும் தொற்றுநோய் பரவும் அபாயமொன்று காணப்படுகின்றது எனவும் அதானிக்கப்பட்டதுடன், மாத்தறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலகத்தின் மூலம் மேற்கூறிய காணி குப்பை முகாமைத்துவ செயற்திட்டமொன்று பேணிச் செல்வதற்காக	பொருத்தமான காணி ஒன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	பொருத்தமான காணியொன்று விரைவாக பெற்றுக்கொண்டு நிச்சயிக்கப்பட்ட காலப் பகுதியில் குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் 2025 ஆண்டில் அறிவித்திருந்தது.

3.2 செயற்பாடடுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 154(1) பிரகாரம் பிரதேச சபையொன்றின் எல்லையில் காணப்படுகின்ற ஏதேனும் காணியொன்றின் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தில் ஒரு சதவித்திற்கு சமமான வரியொன்று பிரதேச சபைக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், பஸ்கொட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்த 07 காணித் துண்டுகளுக்காக 01 சதவீத வரி அறவீடு செய்யாமையால் சபை நிதியத்திற்கு ரூபா 0.09 மில்லியனிற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	ஏல விற்பனையொன்றாக காணப்படாமையால் 01 சதவீதம் அறவிடப்படவில்லை என.	பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 154(1) பிரகாரம் சபைக்குக் கிடைக்க வேண்டிய வரித்தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2021 ஜூலை 08 திகதிய வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பகுதி III பிரிவு 28 இன் பிரகாரம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுகொள்ளாமல் சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர் சார் மற்றும் நகர் சாராத எல்லையினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த 16 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது சபையினால் இனங்கண்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை	அந்த நிர்மாண வேலைகளை சரி செய்து கொள்ளும் படி கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என.	சபியின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே வெளிக்களப் பரிசோதனையிலேயே இனங்கண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான சுமார் 17 ஏக்கர் காணிக்குரிய 19 காணித் துண்டுகள் தொடர்பாக உருத்துறுதிகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இணங்குகின்றேன் என.	உருத்துறுதிகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2015 திசெம்பர் 30 திகதிய இலக்கம் 2016/01 கொண்ட நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரிவு 1.1.2 இன் படி சிக்கலற்ற உரிமை காணப்படுகின்ற காணித் துண்டுகளில் மாத்திரம் நிர்மாண வேலைகள் மேற்கொள்ள வேண்டிய போதிலும், சபையினால் பொரலம்பொத குப்பை முகாமைத்துவம் அமைந்துள்ள காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 2.21 மில்லியன் தொகை செலவிடப்பட்டு சேதனப் பசளை உற்பத்திக்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.	மொத்தக் காணியையும் பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணியை விரைவாக தீர்த்துக்கொண்டு சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபை அலுவலகத்தின் முதலாவது மாடி நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்திற்காக ரூபா 38.1 மில்லியனிற்கான உடன்படிக்கை பெறுமதிக்கு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், உடன்பட்டிருந்தவாறு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படாது ரூபா 12.65 மில்லியனிற்கான வேலைப் பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. மீண்டும் ஒருமுறை இந்தக் கட்டிடத்தின் இரண்டாவது கட்டத்திற்கான நிர்மாண வேலைகளுக்காக கூறுவிலைகள் அழைக்கும் போது மேற்கூறிய ஒப்பந்தக்காரர்களினால் ரூபா 46 மில்லியனிற்கான கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைக்குழு அங்கத்தவர் ஒருவரினால் முதலாம் கட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் கைவிடப்படல் மற்றும் தரை மாடிக்கு சேதம் ஏற்படக்கூடியவாறு செயற்பட்டிருந்தமையால் அவருக்கு ஒப்பந்த வேலையை வழங்குவதற்கான இணக்கம் தெரிவித்திருக்காத போதிலும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர் முதலாம் கட்ட நிர்மாண வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றினார் என பிழையான முறையில் சுட்டிக்காட்டி 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 7.11 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு	கொவிட் தொற்றுநோய் பொருளாதார நெருக்கடியினால் உடன்படிக்கை இணக்கப்பாட்டுடன் இரத்துச் செய்யப்பட்டது எனவும் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையை கவனம் செலுத்தி பெறுகைத் தீர்மானம் எடுக்கப்பட்டது என.	பெறுகைத் தீர்மானம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி தீர்மானங்கள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன், ஒப்பந்தக்காரரின் செயலாற்றுகை தொடர்பாக CIDA நிறுவனத்திற்கு அறிக்கப்பட வேண்டும்.

இணக்கமின்றி பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ)	அந்த ஒப்பந்தக்காரர் முதலாவது கட்ட நிர்மாண வேலைகளை புறக்கணித்தல் தொடர்பாக 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கொவிட் தொற்றுநோய் பொருளாதார நெருக்கடியினால் உடன்படிக்கை இணக்கப்பாட்டுடன் இரத்துச் செய்யப்பட்டது எனவும் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையை கவனம் செலுத்தி பெறுகைத் தீர்மானம் எடுக்கப்பட்டது என.	அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஆளணித் திட்டத்தின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் பதவிகளில் 23 மிகைகள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	அங்கீகரித்துக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது என.	பதவியணி தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்து மிகைப் பதவிகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.